


சென்னை, கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் நேற்று (19.8.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் "மக்கள் சேவை மையத்தின் (Citizen Service Centre)" முன்னேற்றப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து. பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது மாமன்ற உறுப்பினர் நாகராஜன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், சிஎம்டிஏ மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### நெடுஞ்சாலைத் துறை சார்பில்

# 45 உதவிப் பொறியாளர்களுக்கு பணிநியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஆக.20-**

**நெடுஞ்சாலைத் துறையில் 45 உதவிப் பொறியாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.08.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக நெடுஞ்சாலைத் துறையில் உதவிப் பொறியாளர் பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள 45 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

ஒரு மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு சாலை உட்கட்டமைப்பு வசதிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு அரசு தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை உருவாக்கிடும் வகையில், நெடுஞ்சாலைத்துறை வாயிலாக மாநிலம் முழுவதும் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், மேம்பாடு செய்தல், புதிய பாலங்களை கட்டுதல் தேவையான பகுதிகளில் தரமான சாலைகளை அமைத்தல் ஆகிய பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நெடுஞ்சாலைத் துறையின் பணிகள் தொய்வின்றி நடைபெற காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகின்றன. இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை நெடுஞ்சாலைத்துறை சார்பில் 416 இளநிலை வரைதொழில் அலுவலர்கள், 84 உதவிப் பொறியாளர்கள், 186 உதவியாளர்கள், 139 இளநிலை உதவியாளர்கள், 73 தட்டச்சர்கள், 3 தணிக்கை உதவியாளர்கள், 7 சுருக்கெழுத்து தட்டச்சர்கள் நிலை III ஆகியோர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக நேரடி நியமனத்திலும், 45 இளநிலைப் உதவியாளர்கள், 3 உதவி வரைவாளர்கள், 9 தட்டச்சர்கள், 15 பதிவுரு எழுத்தர்கள் மற்றும் 36 அலுவலக உதவியாளர்கள் ஆகியோர் கருணை அடிப்படையிலும், என மொத்தம் 1016 நபர்கள் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக நெடுஞ்சாலைத்துறையின் உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 45 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக முதலமைச்சர் அவர்கள் நேற்று 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலாளர் மரு. ஆர்.செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் இரா.செல்வதுரை, தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கே.ஜி.சத்திய பிரகாஷ், சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) ஆர்.சந்திரசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. நெசவாளர் அணி

# ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

## தி.மு.க. நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு **சென்னை மேற்கு,** மாவட்டத்திற்குட்பட்ட தி.மு.க. நெசவாளர் அணியின் பகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### சென்னை - மேற்கு மாவட்டம்

#### அண்ணாநகர் வடக்கு பகுதி

அமைப்பாளர் - பி.குமரகுரு எண். 346, 12வது குறுக்கு தெரு, டி.பி. சத்திரம் சென்னை - 600 030.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். மெர்லின் எண். 73. குஜ்ஜி 2வது தெரு, அண்ணாநகர் கிழக்கு, சென்னை - 600 102. 2) பி. பூபதி எண். 3/28, 4வது குறுக்கு தெரு. செனாய் நகர், சென்னை - 600 030. 3) எஸ்.விஜயகுமார் எண். 48. "இ" பிளாக், தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய குடியிருப்பு. பிரிவரி சாலை, அண்ணாநகர் மேற்கு, சென்னை - 600 040. 4) சோ.முருகன் எண். 75, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர். பூந்தமல்லி நெடுஞ்சாலை, அரும்பாக்கம், சென்னை - 600 106. 5) வி.சாமுவேல் எண். 478.16வது குறுக்கு தெரு, டி.பி. சத்திரம், சென்னை - 600 030. 6) ஆர். பிரேம் எண். 16எப். செம்மன்பேட்டை கெல்லீஸ், சென்னை - 600 010. 7) ஸ்ரீதர் எண். 6, 9வது தெரு, பி.பி. தோட்டம், அமைந்தகரை, சென்னை - 600 029. 8) ஜெ. சத்யபிரியன் எண். 15, திருவீதி அம்மன் கோயில் தெரு. மேல்நடுவங்கரை, அண்ணாநகர் மேற்கு, சென்னை - 600 040.

#### அண்ணாநகர் தெற்கு பகுதி

அமைப்பாளர் - டி. கிருஷ்ணமூர்த்தி எண்.53/9, பாஞ்சாலி அம்மன் கோயில் தெரு, அரும்பாக்கம், சென்னை-600 106.

துணை அமைப்பாளர்கள் - 1) ராஜா ராமன் எண்.35/13, பாரி தெரு, சூளைமேடு, சென்னை-600 094. 2) டி.ஆர். ஆனந்தன் எண்.14, எம்.எம்.டி.ஏ. காலனி, மெயின் ரோடு, அரும்பாக்கம், சென்னை-600 106. 3) வி. சுரேஷ் எண்.25/32, சுண்ணாம்பு கால்வாய் தெரு, அமைந்தகரை, சென்னை-600 029. 4) ஜெய்சங்கர் எண்.73, கண்ணப்பன் தெரு, அமைந்தகரை, சென்னை-600 029. 5) இ.பி. கிஷோர் எண்.37, பெரியார் பாதை, சூளைமேடு, சென்னை-600 094.

#### ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி

அமைப்பாளர் - எஸ். செந்தில் எண்.2, ஜெ பிளாக், இராமகாமத்துபுரம், தி.நகர், சென்னை-600 017.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். பழனி எண்.50, புதுப்பேட்டை தோட்டம் தெரு, இராயப்பேட்டை, சென்னை-600 014. 2) எ. பழனி எண்.27/19, டாக்டர் தாமஸ் சாலை, தி.நகர், சென்னை-600 017. 3) ஆர். மனோகரன் எண்.26/4, காளியம்மன் கோவில் 2வது தெரு, மக்கீஸ் கார்டன், ஆயிரம்விளக்கு, சென்னை-600 006. 4) சிவனேஷ்குமார் எண்.11/4, எஸ்.எஸ்.புரம், எம்.கே.ராதா நகர், தேனாம்பேட்டை, சென்னை-600 018. 5) ஜி. தியாகராஜன் எண்.13/40, டாக்டர் தாமஸ் சாலை, தி.நகர், சென்னை-600 017. 6) இ. மணிகண்டன் எண்.20/43, பச்சையம்மாள் சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. 7) எஸ். சுரேஷ் எண்.1, டி பிளாக், இராமகாமத்துபுரம், தி.நகர், சென்னை-600 017. 8) எ. பரசுராமன் எண்.25, டி பிளாக், டாக்டர் தாமஸ் சாலை, தி.நகர், சென்னை-600 017. 9) எ. ஐயப்பன் எண்.18/20, நல்லாண் தெரு, தேனாம்பேட்டை, சென்னை-600 018.

#### ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி

அமைப்பாளர் - ஆர். கோபி 12/27, திருவேங்கடபுரம், சூளைமேடு, சென்னை-600 094.

துணை அமைப்பாளர்கள் - 1) தமிழ்வேந்தன் 5/9, கிழக்கு நமச்சிவாயபுரம், சூளைமேடு, சென்னை-600 094. 2) ஆர். ரஞ்சித் 50, கிழக்கு நமச்சிவாயபுரம், சூளைமேடு, சென்னை-600 094. 3) ஆர். பாலாஜி எண்.1, திருவள்ளுவர்புரம் 1-வது தெரு, சூளைமேடு, சென்னை-600 094. 4) பி. மோகன் 289, பிளாக் 14, சுபேதார் தோட்டம், சூளைமேடு, சென்னை-600 094. 5) ஆர். நரேஷ் 324/18, சுபேதார் தோட்டம், சூளைமேடு, சென்னை-600 094. 6) சி. ராயன் 344/20, சுபேதார் தோட்டம், சூளைமேடு, சென்னை-600 094. 7) ஆர். கார்த்திக் 20, ராஜபுராணிக்கர் தெரு, வரதராஜன்பேட்டை, சூளைமேடு, சென்னை-600 094. 8) எம். ராஜேஷ் 140/195, லட்சுமி பிளாட், சூளைமேடு நெடுஞ்சாலை, சென்னை-600 094. 9) எஸ். காமேஷ் 57/10, நேரு தெரு, சூளைமேடு, சென்னை-600 094. 10) எஸ். சிவகுமார் 97/8, 6வது குறுக்கு தெரு, டிரஸ்ட் புரம், கோடம்பாக்கம், சென்னை-24. 11) ஆர். மணிகண்டன் 14/8, தயாள் நகர் மெயின் ரோடு, கோடம்பாக்கம், சென்னை-600 024.

#### சேப்பாக்கம் பகுதி

அமைப்பாளர் - ஜெ. அருண்குமார் எண்.42, மங்கபதி நாயக்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

துணை அமைப்பாளர்கள் - 1) பி.எஸ். ராஜா ஷா எண்.15, அய்யா முதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2. 2) பி. மூர்த்தி எண்.25/33, எல்லப்பன் தெரு, புதுப்பேட்டை, சென்னை-2. 3) என். ரமேஷ் எண்.15, அய்யா முதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2. 4) எஸ். நிரஞ்சன் எண்.1/1, சிங்கண்ணத் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2. 5) வசந்த்குமார் எண்.48, வீரபத்திரன் தெரு, புதுப்பேட்டை, சென்னை-2. 6) அப்துல் ரகுமான் எண்.6/8, நா.நாயக்கன் தெரு, புதுப்பேட்டை, சென்னை-2. 7) சே. பிலால் எண்.103/110, ஜெ.ஜெ.கான் தெரு, இராயபேட்டை, சென்னை-14. 8) டி. பார்த்திபன் எண்.55/34, ஓ.வி.எம். தெரு, சேப்பாக்கம், சென்னை-5. 9) ஆர். ராமன் 12/23, பெருமாள் முதலி தெரு, சென்னை - 600014. 10) எம். ராஜா 4, படவட்டம்மன் கோவில் தெரு, சென்னை - 600042. 11) ஜெ. ராஜேஷ் 3, ரேக்ஸ் தெரு, சிந்தாதரிப்பேட்டை, சென்னை. 12) எம். கரிகாலன் 22, கோவினூர் கோவில் அம்மன் தெரு, சென்னை - 600002. 13) பி. பாலாஜி 69/25, சாமி பண்டாரம் தெரு, சென்னை - 600002.

#### திருவல்லிக்கேணி பகுதி

அமைப்பாளர் - இ. மாரி எண்.128/52, வி.எம்.தெரு, இராயப்பேட்டை, சென்னை-600 005

துணை அமைப்பாளர்கள் - 1) எம்.கதிரவன் எண்.11/42,சைவ முத்தையா 6வது தெரு , இராயப்பேட்டை, சென்னை-600 014. 2) ஆர். முத்துவேல் எண்.26, காமராஜர் தெரு , அம்பேத்கர் நகர், இராயப்பேட்டை, சென்னை-600 014. 3) கே. மஜர் உசேன் எண்.3/2, நீலம்பாஷா தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005. 4) கே. ஆறுமுகம் எண்.10, பழநியம்மன் கோயில் வடக்கு 3வது தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005. 5) ந. தமிழ்வாணன் எண்.4, கற்பக கன்னியம்மன் கோயில் 3வது தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005. 6) பா. நரசிம்மன் எண்.6/11, கற்பக கன்னியம்மன் கோயில் 5வது தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005. 7) யு. மதன் எண்.100, நீலம்பாஷா தர்கா, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 18-08-2025.

**நன்னியூர் இராஜேந்திரன்**
செயலாளர்
தி.மு.க. நெசவாளர் அணி

### மயிலை த.வேலு ஆலோசனை! நந்தனம் கி.மதி – கோ.வி.லெனின் பங்கேற்பு!

# 123 'அ' வட்ட செயற்குழு - நிர்வாகிகள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் மூ.இராஜேந்திரன் அறிக்கை!

சென்னை, ஆக. 20-

சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 123 அ வட்ட கழகத்திற்குட்பட்ட கழக செயற்குழு மற்றும் நிர்வாகிகள் கூட்டம் இன்று (20.08.2025 - புதன்கிழமை) மாலை 5.00 மணியளவில் தேனாம்பேட்டை கவிஞர் பாரதிதாசன் சாலையில் அமைந்துள்ள சமுக நலக்கூடத்தில் செயற்க்குழுக் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்குகின்றனர்.

இதில் பகுதி செயலாளர் நந்தனம். கி.மதி எம்.சி., தொகுதி பார்வையாளர் தகவல் தொழில் நுட்ப அணி மாநில ஆலோசகர் கோ.வி. லெனின் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

எனவே 123 அ வட்டக்கழகத்திற்குட்பட்ட BLA2, BDA மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்த்தற்கு நன்றி தெரிவித்தல் மற்றும் கழக ஆக்க பணிகள்

இவ்வாறு வட்டச் செயலாளர் மூ.இராஜேந்திரன் அறிக்கை விடுத்துள்ளார்.

### சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

# "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

## இன்று 10 வார்டுகளில் நடைபெறுகிறது!

சென்னை, ஆக.20-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் இன்று (20.08.2025) மணலி மண்டலம் (மண்டலம்2), வார்டு 19க்குட்பட்ட எம்.எம்.டி.ஏ. மாத்தூர், 2வது பிரதான சாலையில் உள்ள ராயல் பேலஸ், மாதவரம் மண்டலம் (மண்டலம்3), வார்டு26க்குட்பட்ட மாதவரம் பால் காலனியில் உள்ள தனுவாஸ் மினி ஹால், இராயபுரம் மண்டலம் (மண்டலம்5), வார்டு 57க்குட்பட்ட ஆதியப்பா தெருவில் உள்ள கன்னிகா பரமேஸ்வரி கல்லூரி, திரு.வி.க.நகர் மண்டலம் (மண்டலம்6), வார்டு70க்குட்பட்ட பெரம்பூர், பந்தர் கார்டன் பள்ளி, அம்பத்தூர் மண்டலம் (மண்டலம்7), வார்டு87க்குட்பட்ட பாடி, கம்பர் தெருவில் உள்ள அன்னை மண்டபம், தேனாம்பேட்டை மண்டலம் (மண்டலம்9), வார்டு 115க்குட்பட்ட இராயப்பேட்டை, ஜானி ஜஹான் கான் சாலையில் உள்ள பிரசன்டேசன் ஆலய சமுதாயக் கூடம், கோடம்பாக்கம் மண்டலம் (மண்டலம்10), வார்டு 131க்குட்பட்ட அசோக் நகர், ருக்மணி தெருவில் உள்ள ஜி.ஆர்.டி. வாகன நிறுத்துமிடம், வளசரவாக்கம் மண்டலம் (மண்டலம்11), வார்டு 149க்குட்பட்ட ராமகிருஷ்ணா நகர், தாக்கூர் தெருவில் உள்ள கலைஞர் விளையாட்டு அரங்கம், பெருங்குடி மண்டலம் (மண்டலம்14), வார்டு 187க்குட்பட்ட பாலய்யா கார்டன், பஜனை கோயில் தெருவில் உள்ள ருக்மணி மஹால், சோழிங்கநல்லூர் மண்டலம் (மண்டலம்15), வார்டு 193க்குட்பட்ட துரைப்பாக்கம், சி.எல். மேத்தா கல்லூரி ஆகிய 10 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.




தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் தலைமையில் வீட்டு வசதி வாரியக் கூட்டம் CIT நகர் வாரியத் தலைமை அலுவலகத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு செயலாளர் காகர்லா உஷா வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குனர் (பொறுப்பு) பா.கணேசன், நிதித்துறை துணை செயலாளர் பிரதீக் தயாள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குனர் ஷ்ரேயா சிங், வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் .பாலசுப்ர மணியன், தலைமை வருவாய் அலுவலர் புண்ணியகோடி, மாவட்ட வருவாய் அலுவலர் சைலேந்தர், வாரிய நிதி ஆலோசகர் தரணிபாபு, தலைமை பொறியாளர்கள் கண்ணன், சரவணன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

### மயிலை த. வேலு எம்.எல்.ஏ. - ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே. ஏழுமலை - ரத்னா லோகேஸ்வரன் பங்கேற்பு!

# தியாகராயர்நகர் 132 வது வட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் ந.மோ.முரளி அறிக்கை!

சென்னை, ஆக.20

132 வது வட்டக் கழகச் செயலாளர் ந.மோ. முரளி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தியாகராயர் நகர் 132 வது வட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் இன்று (20.8.2025 புதன்கிழமை) மாலை 6.30 மணியளவில் வட்ட அவை தலைவர் புலியூர் எம். ராமச்சந்திரன் தலைமையில் எஸ். மோகன், கோடம்பாக்கம் மு.சத்தியா, ந.மோ.முரளி ஆகியோர் முன்னிலையில் காமராஜர் காலனி விளையாட்டு திடலில் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த. வேலு, தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி, தியாகராயர் நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே. ஏழுமலை, தொகுதிப் பார்வையாளர் திருமதி ரத்னா லோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகின்றனர்.

எனவே இந்தக் கூட்டத்தில் வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக டிஜிட்டல் ஏஜென்டுகள், மாவட்ட ,பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. –கே.ஏழுமலை எம்.சி., – பா. கார்த்திகா பாஸ்கர் எம்.சி. பங்கேற்பு

# தியாகராயர் நகர் மேற்கு 132 'அ' வட்ட நிர்வாகிகள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங் ராஜா அறிவிப்பு!

சென்னை, ஆக. 20 –

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகரா யர்நகர் மேற்குப் பகுதி 132 அ' வட்ட கழக நிர்வாகிகள் கூட்டம் இன்று நடைபெறுகிறது என வட்டச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:–

சென்னை தென் மேற்கு மாவட்ட தியாகராய நகர் மேற்கு பகுதி 132 'அ' வட்ட கழக நிர்வாகிகள் கூட்டம் இன்று (20–08–2025 (புதன்கிழமை) அன்று மாலை 6 மணி அளவில் எண்.12/29. சக்கரபாணி தெரு தெருவிரிவு மேற்கு மாம்பலம் சென்னை 33ல் உள்ள மாமன்ற உறுப்பினர் அலுவலக அருகில் வட்ட அவைத் தலைவர்.சுப.எம். முருகன் தலைமையில் நடைபெறுகிறது.

தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு. எம்.எல்.ஏ. ஆலோசனையின்படி இதில் எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் சிறப்பாக பணியாற்றுவது மேலும் கழக ஆக்க பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது. இதில் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி மேற்கு பகுதி கழகச்செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., திருமதி.பா கார்த்திகா பாஸ்கர் எம்.சி. ஆகியோர் முன்னிலையில் வகிக்கின்றனர்.

ஆகவே கூட்டத்திற்கு வட்டத்திற்குட்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் அணி தொண்டர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, ஆதிதிராவிடர் அணி, இலக்கிய அணி, வர்த்தக அணி, தொண்டர் அணி, சிறுபான்மை அணி, பொறியாளர் அணி, பாக முகவர்களின் அணி, அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தொ.மு.சா தொழிலாளர் தொழில் சங்கம் கழகத்தின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா அறிக்கையில் தெரிவித்துள்ளார்.